**பூச்சூடிய தார் குச்சிகளுடன் விவசாயிகள் கிரிவலம்**

First Published : 15 Apr 2011 09:51:31 AM IST

திருப்பரங்குன்றம், ஏப். 14: சித்திரைத் திருநாளை முன்னிட்டு, விவசாயம் செழிக்க வேண்டி பூச்சூடிய தார்குச்சிகளுடன் திருப்பரங்குன்றம் விவசாயிகள் வியாழக்கிழமை கிரிவலம் வந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

திருப்பரங்குன்றத்தில் விவசாயிகளின் முதுகெலும்பாக தென்கால் கண்மாய், செவந்தி குளம், பானாங்குளம், குறுக்கிட்டான் குளம், ஆரியன்குளம், நெடுங்குளம், சேமட்டான் குளம் ஆகிய ஏழு கண்மாய்கள் உள்ளன. இந்த கண்மாய்களை சார்ந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

இதனை சார்ந்து வாழக்கூடிய நூற்றுக்கணக்கான விவசாயிகள், ஆண்டுதோறும் சித்திரை மாத பிறப்பன்று நல்ல மழை பெய்ய வேண்டும், விவசாயம் செழிக்க வேண்டும் என்று கோயில் நிலத்தில் நிலத்தில் முதல் உழவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதன்படி வியாழக்கிழமை சித்திரை மாதப் பிறப்பையொட்டி கோயில் வாசல் முன் விவசாயிகள் திரண்டனர். அதன் பின் தார்குச்சியில் பூச்சூடி கிரிவலமாக வந்து, மலைக்குப் பின்புறமுள்ள கோயில் நிலத்தில் நான்கு ஏர் பூட்டி இந்த ஆண்டின் முதல் உழவு செய்தனர். அதனையடுத்து கிராம பெரியோர்களால் இந்த ஆண்டுக்காண விவசாயத் தொழிலாளர்களின் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.

**எள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 15,2011,00:17 IST

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதிகளில் எள் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். வேப்பூர் மற்றும் சிறுபாக்கம் பகுதிகளைச் சுற்றியுள்ள சுமார் 40க்கும் மேற்பட்ட

கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் தற்போது எள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கோடை காலம் என்பதால் கிணறுகளில் கிடைக்கும் குறைவான தண்ணீரை கொண்டு அறுவடை செய்து விடலாம் என்பதாலும், உரம், ஆட்கள் குறைவு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் அதிக அளவில் பயிரிடுகின்றனர். மூன்று மாத பயிரான எள்ளில் கோ-4, திண்டிவனம் -4, வெள்ளை எள் ஆகிய ரகங்கள் அதிக விளைச்சல் தருவதால் இந்த ரகங்களையே விவசாயிகள் பயிரிடுகின்றனர். ஏக்கருக்கு ஐந்து அல்லது ஆறு மூட்டைகள் அறுவடை செய்கின்றனர். அறுவடைக்கு பின் குறைந்த தொலைவிலே உள்ள விருத்தாசலம் அல்லது சேலம் மாவட்டம் ஆத்தூரில் விற்பனை செய்யலாம் என்பதால் விவசாயிகள் சிரமமின்றி பயிரிட்டு வருகின்றனர்.

**தென்னைக்கு 90 லிட்டர் தண்ணீர் தேவை : துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 15,2011,01:25 IST

நாமக்கல்: "தென்னைக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு, 55 லிட்டர் முதல் 90 லிட்டர் வரை தண்ணீர் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. தென்னைக்கு வறட்சியை தாங்கும் திறன் கிடையாது' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கோடையில் தாகம் தனித்திட இளநீரை கொடுக்கும் தென்னையை, நாம் முறையாக பராமரிப்பு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், மகசூல் குறைவதுடன் மரமும் பட்டுப்போக வாய்ப்புள்ளது. தென்னைக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு, 55 லிட்டர் முதல் 90 லிட்டர் வரை தண்ணீர் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. தென்னைக்கு வறட்சியை தாங்கும் திறன் கிடையாது. எனவே, வேரினை சுற்றி எப்போதும் ஈரப்பதம் இருப்பது மிக அவசியம். தென்னையின் வேர் பூமிக்கடியில் மேலாக செல்வதால், மண்ணின் மேற்பகுதி காயும் போது வேர்களும் காய்ந்துவிடும். அதனால், தேவையான தண்ணீர் கிடைக்காமல் தென்னை நீடித்தால் மரமும் காய்ந்து விட நேரிடுகிறது. வறட்சி காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, சொட்டுநீர் பாசனம் கை கொடுக்கும். மண்ணில், 60 சதவீத இடைவெளி தண்ணீராலும், 40 சதவீத இடைவெளி காற்றினாலும் நிரம்பியிருப்பது தென்னைக்கு சாதகமான நிலை ஆகும். சொட்டுநீர் பாசனத்துக்கு இது சாத்தியமாகின்றன.

சொட்டுநீர் பாசனம் உள்ள தோப்புகளில், மரம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 65 லிட்டர் வீதம் தண்ணீர் கொடுக்க வேண்டும். சொட்டுநீர் பாசன வசதி இல்லாத இடங்களில், ஒரு பாசனத்துக்கு மரம் ஒன்றுக்கு, 400 லிட்டர் வீதம் 6 முதல் 8 நாட்கள் இடைவெளியில் மண் வாகைப் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் தட்டுப்பாடுள்ள இடங்களில், 15 நாள் இடைவெளியில் தண்ணீர்

பாய்ச்சலாம். தண்ணீர் தட்டுப்பாடு உள்ள காலங்களில், மரத்தை சுற்றி ஐந்தடி தூரத்தில் பத்து அடிக்கு பத்து அடி என்ற அளவில், சதுரபாத்தி அமைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்யப்பட்ட தென்னங் கன்றினை சுற்றி பனை ஓலையை ஊன்றி ஈரத்தை பாதுகாக்கலாம். தென்னங் கன்றுக்கு அருகில், அடிப்பாகத்தில் சிறிய அளவில் துளையிட்ட மண் பானைகளை பதித்து அதில் நீர் நிரப்பலாம். அதனால், துளையின் வழியாக நீர் கசிந்து தென்னைக்கு கிடைக்கும். வீடுகளில் வளர்க்கப்படும் தென்னை மரங்களுக்கு, வீடுகளில் பயன்படுத்தப்பட்ட கழிவு நீரை பயன்படுத்தலாம். கழிவு நீரானது நேரடியாக மரத்தின் மீது விழும்படியாக விடக்கூடாது. மரத்திலிருந்து நான்கு அடி தள்ளி வாய்க்கால் அமைத்து அதன்மூலம் தண்ணீர் பாய்ச்சுவது நலம் தரும்.

தென்னையின் உதிர்ந்த மட்டை, பானைகள், பன்னாடைகள் போன்றவை பயன்படுத்தி மரத்தை சுற்றி ஐந்தடி அகலத்தில் மூடாக்கு போடலாம். அதனால், நீர் ஆவியாகாமல் தடுக்கப்பட்டு ஈரம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு முறையாக தென்னைக்கு பாசனம் செய்தும், மூடாக்கு அமைத்தும் ஈரத்தை பாதுகாத்தால் தென்னையில் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரபணு உணவை தடை செய்யணும் தி.பூண்டி கருத்தரங்கில் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 15,2011,02:03 IST

திருத்துறைப்பூண்டி: ""மரபணு மாற்று உணவுகள் நஞ்சு உள்ளதாகவும், பல்வேறு தீமைகளையும் கொண்டுள்ளதால் அந்த உணவுகளை உண்ணுவது ஆபத்தானது. ஆகவே, அதை தடை செய்ய வேண்டும்," என்று நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் பேசினார். உலக மரபணு மாற்று தொழில் நுட்பத்துக்கு எதிரான தினத்தை அனுசரிக்கும் கருத்தரங்கம் ஜெயராமன் தலைமையில் வேவ்ஸ் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் வரதராஜன் முன்னிலையில், கிரியேட், பெட்காட், சேஜ், குடும்பம், ஒற்றுமை அறக்கட்டளை அமைப்பின் சார்பில் நடந்தது. "நமது நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் பேசியதாவது: மரபணு மாற்று தொழில் நுட்பம் எந்த சூழ்நிலையிலும், நம் நாட்டுக்கு ஏற்புடையது அல்ல. இந்திய உழவர்களை பரிசோதனை எலிகளாக ஆராய்ச்சியாளர்கள் பார்க்கின்றார்கள். மரபணு மாற்று தொழில் நுட்பத்தின் பருத்தி சாகுபடி செய்த மகராஷ்டிரா, பஞ்சாப், ஆந்திரா உழவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் உழவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசியல்வாதிகள் கண்டுகொள்ளாவிட்டாலும், உழவர்களுக்காக பணி செய்கின்ற தன்னார்வ அமைப்புகள் போராட்ட காலத்தில் இறங்கியுள்ளது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பி.டி., பருத்தி சாகுபடி செய்த உழவர்களுக்கு மகசூல் கிடைக்காமல் பாதிக்கப்பட்டபோது தமிழக வேளாண்மைத்துறை பி.டி., விதை விற்ற கம்பெனிகளிடம் இருந்து

இழப்பீடு பெற்று கொடுத்த வரலாறும் உண்டு. மரபணு மாற்று தொழில் நுட்பத்துக்கான உணவு பொருட்கள் மிக பெரிய ஆபத்தை மக்களுக்கு ஏற்படுத்தும் என்பதை தெரிந்தும் ஆட்சியாளர்கள் பன்னாட்டு கம்பெனிகளுக்காகவே நம் நாட்டு உழவர்களை பழிகடா ஆக்க பார்க்கின்றனர். உயரிய தொழில் நுட்ப ஒழுங்காற்று ஆணையம் உழவர்கள், நுகர்வோர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்களின் கருத்துக்களை கேட்டு பார்லிமென்ட் நடவடிக்கைக்கு கொண்டு செல்ல வேண்டும். மரபணு மாற்று தொழில் நுட்பம் தொடர்பாக மண்ணுக்கும், மனித உயிருக்கும் ஏற்படும் தீமைகள் குறித்து ஊடகங்கள் மூலம் அரசு பிரச்சாரம் செய்ய வேண்டும். இவ்வாறு ஜெயராமன் பேசினார். பாரதி மக்கள் மன்ற தலைவர் காந்தி, பாலம் தொண்டு நிறுவன இயக்குனர் செந்தில்குமார், தமிழக உழவர் இயக்கத்தின் நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சதாசிவம், ஒன்றிய அமைப்பாளர்கள் திருத்துறைப்பூண்டி கரிகாலன், நன்னீலம் உத்தமன் பல்லத்தூர் முருகையன், தஞ்சை மாவட்ட இயற்கை உழவர் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் அன்புசெல்வன் உட்பட பங்கேற்று பேசினர்.

**அரக்கன்கோட்டை, தடப்பள்ளிக்கு பாசன தண்ணீர் இன்று திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 15,2011,01:48 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு முதல்போக சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. முதல்போக சாகுபடிக்காக காத்திருக்கும் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர், கோபியை அடுத்த கொடிவேரி அணையில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் மூலம் பாசனத்துக்கு திறக்கப்படுகிறது. இப்பாசனத்துக்கு முதல்போக சாகுபடிக்கு, ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். பழமை வாய்ந்த அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன வாய்க்காலில் நபார்டு வங்கி திட்ட நிதி உதவியுடன் முதல் கட்ட பராமரிப்பு பணி ஜனவரி மாதம் இறுதியில் துவங்கியது. திட்டமிட்டப்படி பராமரிப்பு பணிகள் நடக்காமல், மிகவும் காலதாமதமாக நடப்பதாக, சட்டசபை தேர்தலுக்கு முன் நடந்த மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் அதிகளவில் புகார் செய்தனர். பராமரிப்பு பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, வழக்கம்போல் இன்று தண்ணீர் திறக்கப்படும் என, விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். "கொடிவேரி அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி முதல்போ பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடுவது குறித்து நேற்று மாலை வரை அரசாணை ஏதும் வரவில்லை' என, பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால், தடப்பள்ளி

மற்றும் அரக்கன்கோட்டை பாசன பகுதியில் சுமார் 24 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படும் நெல், கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் சாகுபடிகள் நடப்பாண்டு பெருமளவில் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**திருவிழா நிறைவு பூ விற்பனை மந்தம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 14,2011,02:44 IST

ஈரோடு: பங்குனி தேர்த்திருவிழா முடிவடைந்த நிலையில், ஈரோட்டில் பூ விற்பனை மந்தமாக உள்ளது. வீட்டு விசேஷங்கள், கோவில் திருவிழா, முகூர்த்த சீஸன் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பூக்களின் தேவை அதிகமாக இருக்கும். தமிழகத்தில் திண்டுக்கல், சேலம், மதுரை, தர்மபுரி, ஓசூர், அந்தியூர், சத்தி பகுதிகளில் அதிக பரப்பளவில் விவசாயிகள் பூக்களை சாகுபடி செய்கின்றனர். இப்பகுதியில் சென்றாண்டைக் காட்டிலும், நடப்பாண்டு சாமந்தி, மல்லி, அரளி ஆகியவை இருமடங்காக விளைந்துள்ளது. இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கும் மற்றும் "சென்ட்' ஆலைகளுக்கும், பூக்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்கின்றனர். இதனால் பூ மண்டிக்கு வரத்து குறைவாகவே இருந்தது. பங்குனி திருவிழா, முகூர்த்த சீஸன், வீட்டு சுபகாரியங்கள் இம்மாதம் இல்லாததால், பூ விற்பனை மந்தமாகவே காணப்படுகிறது. விலையும் சென்ற மாதத்தை விட கிலோ ரூ.20 முதல் 50 ரூபாய் வரை குறைந்துள்ளது. தவிர, வாடிக்கையாளர்கள் சொற்ப எண்ணிக்கையில் மட்டுமே பூக்கள் வாங்கி செல்வதால், வியாபாரிகள் பெரும் கலக்கத்துக்கு ஆளாகி உள்ளனர். ஈரோடு பூ மண்டி உரிமையாளர் குட்டி கூறியதாவது: இம்மாதம் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பூ விற்பனை அதிகமாக இருக்கும். சிறு வியாபாரிகள் குறைந்த அளவே பூ வாங்கிச் செல்கின்றனர். விவசாயிகளுக்கு போதிய விலை இல்லாததால், மொத்தமாக "சென்ட்' நிறுவனத்துக்கு விற்பனை செய்கின்றனர். இதனால், பூ மண்டிக்கும் வரத்து வெகுவாக குறைந்து வருகிறது. நேற்று மார்க்கெட் நிலவரப்படி மல்லி கிலோ 80 ரூபாயில் இருந்து 100 ரூபாய், கேந்தி 25 ரூபாய், செவ்வந்தி 70 ரூபாய், சூரிய ஆப்பிள் ரோஸ் 100 முதல் 120 ரூபாய், சம்பங்கி 70 ரூபாய், முல்லை 200 ரூபாய், கோழிக்கொண்டை 30 ரூபாய், அரளி 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. பூ மண்டிக்கு அந்தியூர் பகுதியில் இருந்து அதிகளவு மல்லி வரத்தாகிறது. சம்பங்கி வரத்து வெகுவாக குறைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கொளுத்தும் வெயில்; பால் உற்பத்தி கடும் சரிவு மானிய விலையில் தீவனம் வழங்க கோரிக்கை**
பதிவு செய்த நாள் : ஏப்ரல் 14,2011,23:02 IST

பல்லடம் : கொளுத்தும் கடும் வெயில் காரணமாக, பல்லடம் பகுதியில் தினமும் 8,000 லிட்டர் பால் உற்பத்தி இழப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, மானிய விலையில் மாட்டு தீவனம் வழங்க அரசு முன்வர வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பல்லடம் பகுதியில் சுல்தான்பேட்டை, செஞ்சேரிபுத்தூர், ஜல்லிபட்டி, கரடிவாவி, பூராண்டம்பாளையம், வாரப்பட்டி, காமநாயக்கன்பாளையம், கேத்தனூர், சித்தம்பலம், கம்மாளப்பட்டி உட்பட பல ஊர்களில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக கறவை மாடு வளர்ப்பு தொழில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.
குறைந்த முதலீட்டில் பிற தொழில்களை விட, அதிகம் உபரி வருமானத்தை ஈட்டிதருவதால், கறவை மாடு வளர்ப்புத் தொழிலில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் 6,000 கறவை மாடுகள் வரை உள்ளன. கலப்பின மாடுகளான சிந்து, ஜெர்ஸி ரக மாடுகள் அதிகம்; நாட்டு ரக மாடுகள் எண்ணிக்கை மிக குறைவு. இம்மாடுகளில் இருந்து தினமும் சராசரியாக 40 ஆயிரம் லிட்டர் வரை பால் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பால் கூட்டுறவு சொசைட்டி மற்றும் தனியார் பால் கொள்முதல் நிலையங்களில் விற்கப்படுகிறது. இதுதவிர,கேரளாவுக்கும் அனுப்பப்படுகிறது. பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக அடித்து வரும் கடும் வெயிலால் பசுந்தீவனங்களான புல், கோரைப்புல் விளைச்சல் முற்றிலும் தடைபட்டுள்ளது. பசுந்தீவனங்களை விரும்பி உண்ணும் கலப்பின மாடுகளுக்கு காய்ந்த சோளத்தட்டுக்கள், இழைகள் உள்ளிட்ட பிற தீவனங்களை உணவாக கொடுக்கின்றனர். கொளுத்தும் வெயில், பசுந்தீவனம் இன்மை காரணமாக கறவை மாடுகளில் பால் செறிவு தற்காலிகமாக குறைந்துள்ளது. உதாரணமாக, ஒரு மாதத்துக்கு முன் தினமும் 12 லிட்டர் பால் கொடுத்த கலப்பின மாடுகள், தற்போது வெயில் தாக்கம் மற்றும் பசுந்தீனம் இன்மையால் மூன்று லிட்டர் பால் குறைந்து ஒன்பது லிட்டர் மட்டுமே கொடுக்கிறது. பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் தற்போது தினமும் 8,000 லிட்டர் அளவுக்கு பால் உற்பத்தி சரிந்துள்ளது. மேலும், தீவனம் விலை அதிகரிப்பு, சோளத்தட்டை, மக்காச்சோள தட்டை விலை உயர்வு விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. பால் உற்பத்தி குறையும் காலத்திலாவது கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க அரசு முன்வர வேண்டும் என கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**பூச்சிகளை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் தயார்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 14,2011,01:06 IST

கோவை : விளைபயிர்களில் பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு வழிமுறைகள் குறித்து வேளாண் பல்கலை அறிவுறுத்தியுள்ளது. கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலை அதிகாரிகள் அறிக்கை: விளைநிலங்களில் நெல், கரும்பு உட்பட பல்வேறு பொருட்கள் பயிரிடப்பட்டுள்ளன. சாகுபடியில் பாதுகாப்பு முறைகளை சரிவர பின்பற்றினால், பூச்சித்தாக்குதலில் இருந்து பயிர்களை காத்து, அதிக மகசூல் பெறலாம். நெற்பயிரில் இலை சுருட்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக உள்ளது. இதை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு ஐந்து சதவீதத்தை தயாரித்து பயன்படுத்தலாம் அல்லது புரோபினோபாஸ், குளோர்பயிரிபாஸ் மருந்தை தெளிக்கலாம். விளக்குப் பொறிகளை வைத்து தாய் அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டுபிடிக்க வேண்டும். கரும்பை தாக்கும் இடைக்கணு புழுக்களை கட்டுப்படுத்த, டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டைகளை ஆங்காங்கே கட்ட வேண்டும். குறிப்பிட்ட நாட்கள் இடைவெளியில் வேளாண் விஞ்ஞானிகளின் பரிந்துரைப்படி கட்ட வேண்டும். ஈரோடு, கோவை, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் பயிர்களில் பப்பாவு மாவுப்பூச்சி தாக்குதல் உள்ளது. இதைக்கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய், வேப்பங்கொட்டை சாறு அல்லது மீன் எண்ணெய் சோப் கலவையை, தண்ணீரில் கலந்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். இவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்த பல்கலை சார்பில் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தேவையான விவசாயிகள் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் ஒட்டுண்ணிகளை இலவசமாக பெறலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வனவியல் நாற்றங்கால் தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,00:00 IST



**நாற்றங்கால் தொழில்நுட்பம்:** 0.25 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் 1.25 லட்சம் நாற்றுகள் வளர்ப்பது லாபகரமாக கருதப் படுகின்றது. கடன் வாங்குபவரின் பிரிவு, கொள்திறன் மற்றும் நாற்றங்காலின் தேவைக்கேற்ப நாற்றங்கால் பரப்பளவு அதிகரிக்கப்படும். சரியான வடிகால் வசதிக்காக நாற்றங்கால்கள், சீரான சரிவு நிலங்களில் அமைக்க வேண்டும். களை எடுத்தல்

மற்றும் உழுதல் மூலம் நிலம் தயார் செய்யப்படும். முதலில் நாற்றங்கால்கள் படுக்கைகளில் வளர்த்து பின்னர் தொட்டிகளில் வளர்க்கப்படும். நாற்றங்காலிற்கு நிரந்தர நீர் ஆதாரம் இருக்க வேண்டும். ஏனெனில் வெப்பநிலை மற்றும் செலவை குறைக்க இது உதவும். 100ட் து 25ட் அளவு கொண்டு செவ்வக வடிவில் அமைக்க வேண்டும்.

10மீ து 10மீ (10 ச.மீ) அளவு கொண்ட பத்து விதைப்புப் படுக்கைகளை அமைக்க வேண்டும். இந்நிலையில், 1:12 விகிதத்தில் படுக்கைகள் தேவைப்படும். அதாவது ஒவ்வொரு படுக்கைக்கும் முறையாக 12 படுக்கைகள் தேவைப்படும். 120 படுக்கைகளில்இருந்து 1.25 லட்சம் நாற்றுகளை வளர்த்து, அவற்றிலுள்ள 1.20 லட்சம் நாற்றுகளை நெகிழி உரைகளில் மீதமிருக்கும் 5000 நாற்றுகள் வேர் நாற்றுகளாக வளர்க்கப்படும்.

குறிப்பிட்ட காலத்திற்கு நாற்றங்காலிலுள்ள நாற்றுகளுக்கு குறைவான அளவு நீர் அளித்தல் மற்றும் அவைகள் சூரிய வெளிச்சத்திற்கு பல்வேறு நேரத்திற்கு வெளிப்படுத்துவதன் மூலம் நாற்றுகளை கடினப் படுத்துதல்; இவ்வாறு செய்கையில் நாற்றுகளை வயலில் நடவு செய்தபின், பாதகமான சூழ்நிலைகளையும் அவை தாங்கி வளர உதவிசெய்யும். நாற்றங்கால்கள் தற்காலிகமானவைகள் மற்றும் அவை ஐந்து வருடங்கள் வரை இருக்கும். கோடைகால மாதங்களில் நெகிழி விரிப்புகள் அல்லது நிழல் வலைகள் கொண்டு நிழல் வழங்கப்படும். மூங்கில் பாய்களைக் கொண்டு நிழல் வழங்கப்படும். கம்பியைக் கொண்டு பகுதி முழுவதும் சுவர்போல் அமைத்து பாதுகாப்பு கொடுக்கலாம்.

நீர்வளம் உள்ள பகுதிகளில் நவீன நாற்றங்கால்கள் அமைத்து தரமான நாற்றுகள் அளிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. நிரந்தரமாக அழிந்துவரும் வனவளங்கள் மற்றும் அதிகரித்து வரும் காடு அழித்தல்கள் போன்றவைகளை முன்னிறுத்தி, சமுதாய மக்களையும் சறுசுறுப்பாக காடு வளர்ப்பு திட்டங்களில் பங்குபெற வைத்தால்தான் இத்திட்டங்கள் வெற்றிபெறும். கிராம சமூகம் நேரடியாக பயன்பெறும் வரை சிறிய ஊக்குவிப்பு பணம் அவர்களுக்கு வழங்கப்படுவது நன்றாக அறிந்த விஷயமாகும். கிராமப்புறங்களில் நாற்றங்கால்கள் அமைப்பதற்கு கடனுதவி செலவுகள் மூலம் எளிய மற்றும் சரியான நேரத்தில் நாற்றுகள் கிடைக்குமாறு செய்வதன் மூலம் கிராமப்பகுதிகளில் வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம். சமுதாய மக்களை வன நாற்றங்கால்கள் அமைப்பதற்கு ஈடுபடுத்துவது, எதிர்காலத்தில் வன மறுமலர்ச்சி திட்டங்களில் முக்கிய அம்சமாக இருக்கும். இங்கே குறிப்பிட்டுள்ள நாற்றங்கால்கள் அமைக்கும் நிதியுதவி முறை பெரிய அளவில் வனம் வளர்ப்பதற்கு பேருதவியாக இருக்கும். தொடர்புக்கு: எம்.அகமது கபீர், 61, ஆர்.கே.ஆர்.நகர், தாராபுரம், திருப்பூர்-638 656.-எம்.அகமது கபீர், 93607 48542.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,00:00 IST

மண்ணில் கரிமப்பொருள் சேமித்தல் என்பது காற்றிலுள்ள கரியமில வாயுவைப் பயிர்கள் மூலம் ஈர்த்து மண்ணில் கரிமப் பொருளாக சேமித்து வைத்தல்ஆகும். பயிரின் வேர்கள் மூலமாக இத்தகைய கரிமப் பொருட்கள் நேரடியாக நிலத்தில் இடப் படுகின்றன. இயற்கை உரங்கள், தொழுஉரம், கால்நடை, கோழிக் கழிவுகள், பண்ணைக் கழிவுகளை நிலத்தில் இடும்பொழுது இவைகள் சிதைந்து மக்குகின்றன. பின் இவை தாதுக்களுடன் இணைந்து ஒருவித கூட்டுப் பொருளாக மாறும். இவை நுண் துகள்களாக எளிதில் சிதை வடையாது. இத்தகைய நுண் துகள்கள் கரிமத் துகள்களைச் சுற்றி ஒட்டிக்கொண்டு மூடிவிடுவதால் நுண்ணுயிர்களின் தாக்குதலுக்கு உட்படுவதில்லை. எனவே கரிமப் பொருட்கள் மண்ணின் நுண்ணுயிரிகளால் சிதைக்கப்படாமல் பாதுகாக்கப் படுகிறது. இதனால் கரிமம் வாயுக்களாக வெளியேறுவது தடுக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது.
மண், பயிர் வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் மூலம் மண்ணில் கரிமவளத்தை மேம்படுத்தலாம்.
* **உழவியல் முறைகள்:** பாதுகாப்பான வரையறுக்கப் பட்ட உழவு முறைகளைக் கையாளுவதன்மூலம் மண்ணின் கரிமப்பொருள் வீணாவதைத் தடுக்க முடியும். இதன்மூலம் எக்டருக்கு ஆண்டுதோறும் 2-3 டன்கள் வரை மண்ணில் கரிமப் பொருளை ஈர்த்து சேமிக்க இயலும். உழவு?இல்லாத வேளாண்மை மூலம் கரியமிலவாயு அதிகமாக வெளியேறுவதைத் தடுக்கவும் குறைக்கவும் முடியும்.

* **மூடுபயிர்:** மூலமாக மண்ணில் அதிக அளவு கரிமப்பொருளை ஈர்த்து சேமிக்க இயலும். பயறுவகைப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் மண்வாழ் பல் உயிர்களைப் பெருக்கியும் பயிர்க்கழிவுகளை நிலத்திலிட்டும் கரிமச்சத்தினைச் சேமிக்கலாம்.

* **பயிர்சுழற்சி:** சரியான பயிர் சுழற்சியின் மூலம் மண்ணில் கரிம வளத்தை மேம்படுத்துவதோடு நுண்ணுயிர்களின் செயல் பாட்டினையும் மேம்படுத்தலாம்.

* **உர மேலாண்மை:** பயிர்களுக்குத் தேவையான உரங்களை முறையாகப் பயன்படுத்தும்போது மண்ணின் கரிமவளத்தைப் பாதுகாக்க முடியும். குறிப்பாக ஒருங்கிணைந்த உர மேலாண்மை மிக முக்கியமாகும்.?இயற்கை உரங்கள், கால்நடைக் கோழிக் கழிவுகள், பயிர்க்கழிவுகள், பசுந்தாள் உரங்கள், கம்போஸ்ட், தொழு உரங்களைத் தகுந்த அளவில் முறையாகப் பயன்படுத்தி மண்ணில் கரிமச் சத்தினை அதிகரிக்கலாம்.

* **நீர் மேலாண்மை:** முறையான நீர் மேலாண்மை மூலம் வறட்சிப் பகுதிகளிலும் மானாவாரி நிலங்களிலும் அங்கக உயிர்ப்பொருளை அதிகரிக்கச் செய்தும் வேர்கள் நன்கு வளர்ந்து மண்ணில் கரிமப் பொருட்களை மேம்படுத்தும்.


* தரம் குறைந்த நிலங்களை மேம்படுத்துவதன் மூலம் மண்ணின் கரிமப் பொருட்களின் அளவை

கணிசமாக அதிகரிக்கலாம். இதன்மூலம் 600-1000 கிலோ கரிமச்சத்தை ஒரு எக்டரில், ஒரு ஆண்டில் மண்ணில் சேமிக்க முடியும்.

*** காடு வளர்ப்பு:** தரிசு நிலங்களிலும், தரம் குறைந்த நிலங்களிலும் காடு வளர்ப்பதன் மூலம் வாயு மண்டல கரியமில வாயுவை ஈர்த்து மண்ணில் கரிமப் பொருளாக சேமிக்க முடியும். இதன்மூலம் ஆண்டுதோறும் எக்டருக்கு 800-1000 கிலோ கரிமப்பொருட்களைச் சேர்க்கலாம். (**தகவல்:** முனைவர் ச.மகிமைராசா, சா.செண்பகவள்ளி, சுற்றுச்சூழல் அறிவியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 041. 96555 70664)டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**பருத்தியில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு மற்றும் நிவர்த்தி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,00:00 IST



**சுண்ணாம்புச்சத்து குறைபாடு:** பருத்தி சுண்ணாம்புச்சத்தினை தாங்கி வளர்வதோடு அதிகமாகவும் எடுத்துக்கொள்ளும் திறன் கொண்டது. செடியின் தண்டு உறுதியாக அமைவதற்கு சுண்ணாம்பு சத்து மிகவும் அவசியம். சுண்ணாம் புச்சத்து மிகக் குறைந்த நிலங்களில் விதைத்த 3 வாரங்களிலேயே இலைகளின் காம்புகள் வளைந்து வலுவில்லாமல் முறிந்துவிடும். செடிகள் உயரமாக வளர்ந்து காய்பிடிக்கும் தன்மையைக் குறிக்கும்.

**நிவர்த்தி செய்யும் முறை:** கால்சியம் குளோரைடு 0.5 சதம் (1லிட்டர் தண்ணீரில் 5 கிராம்) (அ) கால்சியம் நைட்ரேட் 0.5 சதம் என்ற அளவில் பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணங்களில் இலைவழியாகத் தெளிக்கலாம்.

**மெக்னீசியச் சத்து குறைபாடு, அவற்றின் அறிகுறிகள்:** மணற்பாங்கான நிலங்களில் மெக்னீசியம் குறைபாடு அதிகம் காணப்படும். மண்ணில் அதிகமான சாம்பல்சத்து இருப்பின் மெக்னீசியச் சத்து பருத்திக்குக் கிடைப்பது தடைபடுகிறது. செடியின் பிஞ்சு காய்ந்து உதிர்கின்றன. சிவப்பு நிற

இலைகளில் நரம்புகள் மட்டும் பச்சை நிறமாக இருக்கும். இலைகள் முதிரும் முன்பே உதிர்ந்துவிடும். இது இலை சிவப்பு நோய் என்று அழைக்கப்படுகிறது. இந்நோய் செடியின் ஆரம்ப வளர்ச்சி காலத்தில் தோன்றினால் மகசூல் குறைவதுடன் பஞ்சின் தரமும் குறைகிறது.
**நிவர்த்தி செய்யும் முறை:** ஒரு எக்டருக்கு 25 கிலோ மெக்னீசியம் சல்பேட்டை அடியுரமாக இடவேண்டும். மேலும் 2 சத மெக்னீசியம் சல்பேட் கரைசலுடன் (1 லிட்டர் நீரில் 20 கிராம்) 1 சதம் யூரியா கரைசலை (1 லிட்டர் நீரில் 10 கிராம்) சேர்த்து 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.
**துத்தநாகச்சத்து குறைபாடு - அறிகுறிகள்:** நிலப்பராமரிப்பு மிகவும் குறைந்து இருப்பதும், அதிகமாக ரசாயன உரங்களை மட்டும் பயன்படுத்துவதும் துத்தநாக குறைபாடு தோன்ற காரணங்கள் ஆகும். பயிர் வளர்ச்சி குன்றி குறைந்த இடைவெளியில் கணுக்கள் தோன்றி இலைகள் ஒரு கொத்து போல தோற்றமளிக்கும். இளம் இலைகளில் நரம்புகளுக்கு இடைப் பட்ட பகுதிகள் வெளிர் மஞ்சள் நிறமாகி பின்னர் இலை முழுவதும் பழுப்பு நிறமாகும். இலைகள் தடிமனாகவும், மொரமொரப் பாகவும், உடையும் தன்மையுடனும் இருக்கும். இலை ஓரங்கள் மேல் நோக்கி குவிந்திருக்கும். முதலில் தோன்றிய மொட்டுகளும் பூக்களும் உதிர்ந்துவிடும்.
நிவர்த்தி செய்யும் முறை: ஒரு எக்டருக்கு 50 கிலோ துத்தநாக சல்பேட் என்ற நுண்ணூட்டச் சத்தினை அடி உரமாக இடவேண்டும். மேலும் 0.5 சதம் துத்தநாக சல்பேட் கரைசலை விதைத்த 40வது நாளும் பின் 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறையும் தெளிக்க வேண்டும்.
போரான்சத்து குறைபாடு - அறிகுறிகள்: செடிகள் வளர்ச்சி குன்றி காணப்படும். சப்பைகள், பூக்கள் மற்றும் பிஞ்சுகள் அதிக அளவில் உதிரும். நுனி இலைகள் சிறுத்து மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் காணப்படும். முதிர்ந்த இலைகள் தடித்து காணப்படும். இலைக்காம்புகள் வளைந்து நடுப்பாகத்தில் அழுகல் தோன்றும். சப்பைகள் மற்றும் பிஞ்சுகளின் அடிப்பாகத்தில் உள்ள திசு சுவர்கள் உடைந்து தேன் போன்ற திரவம் வெளிப்படும். இதனால் சப்பைகளும் பிஞ்சுகளும் காய்ந்து உதிர்கின்றன. மேலும் காய்கள் சிறுத்தும், வளைந்தும் காணப்படும். இளம் காய்களின் நடுவில் அழுகல் தோன்றும்.
**நிவர்த்தி செய்யும் முறை**: ஒரு எக்டருக்கு 20 கிலோ போராக்ஸ் என்ற நுண்ணூட்டச் சத்தினை அடி உரமாக இடவேண்டும். மேலும் 0.1 சதம் (1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம்) போராக்ஸ் கரைசலை 10 நாட்கள் இடைவெளியில் 2 முறை செடிகளின் மேல் தெளிப்பதன் மூலம் இக்குறையை நிவர்த்தி செய்யலாம். மேலும் இக்கரைசலைப் பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் பருவங்களில் இலைவழியாக அறிகுறிகள் மறையும் வரை தெளிக்கலாம்.
**நுண்ணூட்டச்சத்து இடுதல்:** எக்டருக்கு 12.5 கிலோ பருத்தி நுண்ணூட்ட உரக்கலவையை 40 கிலோ மணலுடன் கலந்து விதைத்த உடன் (அ) விதைத்த 3 நாட்களுக்குள் நிலத்தில் தூவ வேண்டும்.

வி.கு.பால்பாண்டி,இணைப்பேராசிரியர்,ரா.துரைசிங், பேராசிரியர்,ந.ராஜேஷ், முதுநிலை மாணவர்,உழவியல் துறை வேளாண்மைக் கல்லூரி மற்றும்ஆராய்ச்சி நிலையம்,மதுரை.

**ஆறுமுகநேரி பகுதியில் கோடைமழை அறுவடை பணிகள், உப்பு உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,00:33 IST

ஆறுமுகநேரி : ஆறுமுகநேரி பகுதியில் பெய்து வரும் கோடை மழையினால் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. உப்பளத்தில் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. ஆறுமுகநேரி மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த சில தினங்களாக காலை நேரங்களில் மட்டும் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் ரோடுகளில் தண்ணீர் வெள்ளம் போன்று பெருக்கெடுத்து ஓடியது. கடந்த சில நாட்களாக அதிகாலையில் மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும் பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து கொண்டிருந்தது. இந்நிலையில் 3 நாட்களாக பெய்துவரும் மழையினால் பூமி குளிர்ச்சி அடைந்துள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஆறுமுகநேரி மெயின்பஜாரில் தண்ணீர் பெருமளவு தேங்கி காணப்படுகிறது. இதனால் வாகனங்களில் செல்பவர்கள் பெரிதும் சிரமத்துடன் சென்று வருகின்றனர். மேலும் ஆறுமுகநேரி பகுதியில் பிசான பருவ நெல்சாகுபடி அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஆறுமுகநேரி பொய்யான்குளம், நல்லூர் கீழகுளம் பாசன பகுதியிலுள்ள வயல்களில் அறுவடைப்பணிகள் நடந்து வருகிறது. தற்போது பெய்துவரும் கோடை மழையினால் பயிர்கள் நனைந்து காணப்படுகிறது. இதனால் அறுவடை பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. மேலும் கடந்த சில நாட்களாக அறுவடை செய்து வயலில் மூடை மூடையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் மழைநீரில் நனைந்து கொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். மேலும் உப்பளத்தில் உப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. பருவ மழைக்காலங்களில் உப்பு பாத்திகளில் தண்ணீர் தேங்கி பாத்தி பாதிக்கப்பட்டிருக்கும். மழைகாலம் முடிந்த பிறகு பாத்திகளை உப்பு உற்பத்தி செய்வதற்கு தகுந்தவாறு செய்நேர்த்தி மூலம் தயார் செய்வார்கள். அப்பணிகள் கடந்த சில மாதங்களாக நடந்து வந்தது. தற்போது தான் உப்பளங்கள் உப்பு உற்பத்தி செய்வதற்காக தயார் நிலையிலிருந்தது. ஒரு சில உப்பளங்களில் பொன் உப்பு வாரப்பட்டு வந்தது. மேலும் தயார் செய்யப்பட்ட உப்பளங்களிலிருந்து உற்பத்தியான உப்புகளை சேகரித்து கொண்டிருந்தனர். இந்நிலையில் உப்பளங்களில் தண்ணீர் தேங்கி கிடப்பதால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

**பதனீர் உற்பத்தி குறைந்தும் கருப்பட்டி விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,21:22 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூரில் பதனீர் உற்பத்தி குறைந்தும், கருப்பட்டி விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஸ்ரீவி., மம்சாபுரம், திருவண்ணாமலை, செண்பகதோப்பு பகுதிகளில் ஏராளமான பனை மரங்கள் உள்ளன. இதை நம்பி நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் உள்ளனர். பனை மரங்களிலிருந்து ஆண்டுதோறும் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை தினமும் 50 ஆயிரம் லிட்டருக்கும் அதிகமாக பதனீர் கிடைக்கும். இதை, ஸ்ரீவி., பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்கிறது. பதனீரை பதப்படுத்தி 200 மி.லி., பாக்கெட்களில் நிரப்பி விருதுநகர், மதுரை, கோவில்பட்டி போன்ற இடங்களுக்கு விற்கப்படும். சிலர் பதனீரை கொண்டு கருப்பட்டி உற்பத்தி செய்து கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியாரிடமும் விற்று வருகின்றனர். இங்கு உற்பத்தியாகும் கருப்பட்டி நாகர்கோவில், திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், கொடைக்கானல் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் கடந்தாண்டு சரி வர மழை பெய்யவில்லை. இதனால் ஜனவரியில் துவங்க வேண்டிய பதனீர் உற்பத்தி, பிப்ரவரி கடைசி வாரத்தில் தான் துவங்கியது. தற்போது கூட்டுறவு சங்கங்களில் குறைந்தளவு பதனீரே கொள்முதல் செய்வதால், பெரும்பாலான விவசாயிகள் சொந்தமாக கருப்பட்டி உற்பத்தி செய்து வருகின்றனர். ஒரே நேரத்தில் கருப்பட்டி உற்பத்தி பெருகியதால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் ஒரு கிலோ 120 ரூபாய் வரை விற்பனையானது. கடந்தாண்டு 70 ரூபாய்க்கு விற்பனையாது. இந்தாண்டு குறைவான பதனீர் உற்பத்தி இருந்தும் விவசாயிகள் எதிர்பார்த்தது போல் கருப்பட்டி விலை உயரவில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இது குறித்து விவசாயி அய்யனார் கூறியதாவது: கடந்த இரு மாதங்களுக்கு முன், 55 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்ட கருப்பட்டி, தற்போது 40 முதல் 44 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, என்றார்.

**மஞ்சள் சந்தைக்கு விடுமுறை மேலும் விலை சரிய வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 13,2011,01:16 IST

ஈரோடு:சட்டசபை தேர்தல், அம்பேத்கார் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மஞ்சள் சந்தைகளுக்கு வரும் 14ம் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மஞ்சள் விலை தேக்கம்

அதிகரித்து, விலைசரிய அதிக வாய்ப்புள்ளது என விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.நடப்பாண்டு துவக்கத்தில் இருந்து புதிய மஞ்சள் வரத்து அதிகரித்துள்ள நிலையில் படிப்படியாக விலை குறைந்தது. இந்நிலையில், ஈரோட்டில் பெரியமாரியம்மன் குண்டம் திருவிழாவையொட்டி மஞ்சள் சந்தைகளுக்கு சென்ற மாதம் 25ம் தேதி முதல் 4ம் தேதி வரை பத்துநாள் விடுமுறை அளிக்கப்பட்டது.

விடுமுறை முடிந்து மஞ்சள் சந்தைகள் துவங்கிய போது, பத்து நாள் இடைவெளியில் பெருமளவு மஞ்சள் தேக்கமடைந்தது. மஞ்சள் விலை குறைந்த நிலையிலும், விவசாயிகளும் புதிய வரத்து மஞ்சளை சந்தைகளுக்கு அதிகமாக எடுத்து வந்தனர். தற்போது, தேர்தல் மற்றும் அம்பேத்கார் பிறந்தநாளையொட்டி இன்றும், நாளையும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மஞ்சள் தேக்கம் அதிகரிக்கவும், விலை வீழ்ச்சி அடையவும் அதிக வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு ஒழுங்குமுறை மஞ்சள் விற்பனைக் கூட அலுவலர் கூறியதாவது: ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், வெளி மார்க்கெட், ஈரோடு சொசைட்டி மற்றும் கோபி சொசைட்டி ஆகிய சந்தைகள் வழக்கம் போல் திங்கள் முதல் வெள்ளி வரை செயல்பட்டு வருகிறது. தமிழக சட்டசபை தேர்தலில் அனைத்து தொழிலாளர்களும் வாக்களிக்க வசதியாக, தேர்தல் நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

உத்தரவின் படி, ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிச்சந்தை, கூட்டுறவு மஞ்சள் சந்தைகளுக்கு நாளை (இன்று) விடுமுறை அளிக்கப்பட்டது. அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு 14ம் தேதி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மீண்டும் 15ம் தேதி வழக்கம்போல் மஞ்சள் சந்தைகள் செயல்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**தக்காளியைபதப்படுத்த பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 12,2011,23:22 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில் "தக்காளி பதப்படுத்துதுல்' பயிற்சி முகாம் இரு நாட்கள் நடக்கிறது. வரும் 19 மற்றும் 20ம் தேதிகளில், காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இப்பயிற்சி முகாம் நடக்கிறது. உலர வைக்கப்பட்ட தக்காளி, தக்காளி சூப் பவுடர், தக்காளி பானம், தக்காளி ஆவக்காய் ஊறுகாய், தக்காளி பழ ஜாம், தக்காளி கெட்சப் போன்ற உணவு

பொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப் படுகிறது.ஆர்வமுள்ளவர்கள் ரூ.1000 மட்டும் செலுத்தி பெயர் முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சி கட்டணத்தை முதல்வர் (வேளாண் பொறியியல்), கோயம்புத்தூர் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். முன்பதிவுக்கான இறுதி நாள் வரும் 18ம் தேதி. விவரங்களுக்கு 0422-661 1268 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**சித்திரைக் கனி: பழம், பூ விலை ஏற்றம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 12,2011,21:18 IST

கோவை : பெரியகடைவீதி மற்றும் பூமார்க்கெட்டில் முக்கனிகளின் விற்பனை ஜோராக நடந்தது. சித்திரை மாதப்பிறப்பை, வரவேற்க மக்கள் பழ வகைகளையும், பூ வகைகளையும் ஆர்வத்துடன் வாங்கினர். தமிழக அரசு "தை' முதல் தேதியை தமிழ் புத் தாண்டாக அறிவித்தது. ஆனாலும், பலர் தமிழ்ப் புத்தாண்டாக சித்திரை மாதப்பிறப்பை கொண்டா டுகின்றனர். நாளை "விக்ருதி' ஆண்டு நிறைவடைந்து, "கர' ஆண்டு பிறக்கிறது. இந்த ஆண்டு மழை பெருகவும், சுபிட்சம் நிலவவும் கோவில்களில் சிறப்புப் பூஜை நடக்கிறது.

சித்திரைப் பிறப்பை மக்கள் மங்களகரமாக வரவேற்க, பூமார்க்கெட்டில் முக்கனிகளான மா, பலா, வாழை உள்ளிட்ட பழ வகைகளை மக்கள் வாங்கிச் சென்றனர். பூ மார்க்கெட்டில் விற்கப்பட்டவை: டில்லி ஆப்பிள் கிலோ ரூ.100, சிம்லா ஆப்பிள் ரூ.120, மாம்பழங்கள் நடுச்சாலை ரூ.35, குண்டு ரூ.40, அப்போஸ் ரூ.45, இமாம்பசந்த், பங்கனப்பள்ளி -ரூ.50, பலாப்பழம் ரூ.15 முதல் ரூ.100, சாத்துக்குடி ரூ.35, சப்போட்டா ரூ.27, சீதாப்பழம் ரூ.30, முலாம்பழம், விலாம்பழம், வெள்ளரி ஆகியவை ரூ. 20.

தேர்தலையொட்டி இன்று விடுமுறை அறிவித் திருப்பதால், நாளை சித்திரைப்பிறப்பை கொண்டாடுவதற்கு மக்கள் நேற்றே தயாராகி விட்டனர். பூ வகை: மல்லி ரூ.350, முல்லை ரூ.280,, ஜாதி ரூ.300. இன்று பூக்களின் விலை பல மடங்கு உயரும் என்று வியாபாரிகள் கூறினர்.

தினகரன்

# சர்க்கரை உற்பத்தி உயரும்

பதிவு செய்த நாள் 4/14/2011 1:56:48 AM



மும்பை: கடந்த மாதத்துடன் முடிந்த 2010 &11ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 35 சதவீதம் வரை உபரியாக இருக்கும் என தர நிர்ணய ஏஜென்சி தெரிவித்துள்ளது. ஆண்டுதோறும் அக்டோபர் முதல் செப்டம்பர் வரை சர்க்கரை உற்பத்தி ஆண்டாக கருதப்படுகிறது. 2009&10ம் கரும்புக்கான ஆண்டில் கொள்முதலுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்தது. எனவே, 2010 &11ல் சர்க்கரை உற்பத்தி 2.5 கோடி டன் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உள்நாட்டு தேவையை விட 30 முதல் 35 சதவீதம் கூடுதலாக இருக்கும் என்று தர நிர்ணய ஏஜென்சியான ஐசிஆர்ஏ தெரிவித்துள்ளது.